# இதயா மகளிர் கல்லூரி
# கும்பகோணம்

வகுப்பு : இளநிலை மூன்றாமாண்டு.

பருவம் : ஆறாம் பருவம்.

பாடம் : தொல்காப்பியம் - பொருளதிகாரம்

பாடக்குறியீடு : **16LCCLT15**


பேராசிரியர் : முனைவர் ச. சாந்திமதி
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வுத் துறை,
இதயா மகளிர் கல்லூரி,
கும்பகோணம் - 612 001


Scanned with CamScanner

# தொல்காப்பியம் - பொருளதிகாரம்.

## 16LCCLT15

## மரபியல்

இயல் 9 – ஆறாம் பருவம்

தொல்காப்பியம் - பொருளதிகாரத்தில் காணப்படும் ஒன்பது இயல்களில் பெரும்பாலானவற்றில் அகவாழ்வு பற்றிய வரையரைகளே அதிகமாகக் காணப்படுகன்றன.

அகம் பற்றி விளக்கும் இயல்களாக அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் காணப்படுகின்றன.

புறத்திணையியலில் போரிடும் முறைகளும் புகழின் வெளிப்பாடும் எனப்பலவகைப்பட்ட செய்திகள் விளக்கப்படுகின்றன.

மெய்ப்பாட்டியலில் உடலில் தோன்றக் கூடிய மாறுபாடுகள் நுட்பமாக விளக்கப்படுகின்றன.

உவமையியலில் செய்யுளில் பயன்படுத்தப்படும் உவமைகளை விரிவாக விளக்குகின்றது.

செய்யுளியலில் பாக்களின் எழுத்து, அசை, சீர், தளை, அடி போன்ற உறுப்புகள் விரிவாக விளக்கப்படுகின்றன.

இலக்கிய ஆக்கத்திற்கான இலக்கணம், கோட்பாடுகள், வரையறைகள் என எல்லா விளக்கங்களையும் இவ்வியலில் காணலாம்.

ஒன்பதாவதாக உள்ள மரபியலில் உயர்திணையில் நால்வகை வருணப்பாகுபாடு விளக்கப்படுகின்றது.

1. இளமைப்பெயர்கள்
2. ஆண்பால்பெயர்கள்
3. பெண்பால் பெயர்கள்
4. ஒன்று முதல் ஆறறிவு உயிரினங்கள்
5. உயர்திணை மரபுகள்
6. ஓரறிவு உயிர்களின் வேறுபாடு
7. உலகத்தோற்றம்
8. நூல்கள்
9. காண்டிகை உரை
10. நூலின் பத்துவகைக் குற்றங்கள்
11. நூலின் உத்திகள்

Scanned with CamScanner

## இளமைப்பெயர்களின் விரிவாக்கம்

| வ.எண் | இளமைப்பெயர்கள் | உயிரினங்கள் |
|---|---|---|
| 1 | பார்ப்பு | பறப்பவை, தவழ்பவை (குரங்கு) |
| 2 | பறழ் | மூங்கா (கீரி) வெருகு, எலி, அணில், நாய், பன்றி, புலி, முயல் |
| 3 | குட்டி | மூங்கா, வெருகு, எலி, நரி, குரங்கு |
| 4 | குருளை | நாய், பன்றி, புலி, முயல், நரி |
| 5 | கன்று | யானை, குதிரை, கழுதை, கடமை, ஆன், எருமை, மரைஆ கவரி, கராம், ஒட்டகம், ஓரறிவு உயிர் : புல், மரம் |
| 6 | பிள்ளை | பறப்பவை, தவழ்பவை, பன்றி பாம்பு, மூங்கா, முதலை, புலி, முயல், நரி, குரங்கு |
| 7 | மகவு | குரங்கு, மக்கள் |
| 8 | மறி | யாடு, குதிரை (நவ்வி, உழை, புல்வாய் |
| 9 | குழவி | யானை, ஆ, எருமை, கடமை, முசு, மரைஆ, குரங்கு |
| 10 | போத்து | ஓரறிவு உயிர்கள் - புல், மரம் |

## ஆண்பால் பெயர்களின் விரிவாக்கம்

| வ.எண் | ஆண்பால் பெயர்கள் | உயிரினங்கள் |
|---|---|---|
| 1 | எருது | காளை |
| 2 | ஏற்றை | ஆண் இனங்கள் |
| 3 | ஏறு | பன்றி, புல்வாய் (மான்) (உழை, கவரி, எருமை, மரைஆ, பெற்றம், சுறவு) |
| 4 | ஒருத்தல் | புல்வாய், புலி, உழை, மரைஆ, கவரி, கராம், யானை, பன்றி, எருமை |
| 5 | களிறு | வேழம், கேழல் |
| 6 | சே | காளை |
| 7 | சேவல் | மயில் தவிர்த்த பறவை இனம் |
| 8 | இரலை | புல்வாய், கலை |
| 9 | போத்து | பெற்றம், எருமை, புலி, மரைஆ, முதலை, இடங்கர், கராம், வரால், வாளை |
| 10 | கண்டி | எருமை |

## பெண்பால் பெயர்கள்

| வ.எண் | பெண்பால் பெயர்கள் | உயிரினங்கள் |
|---|---|---|
| 1 | ஆ | பெற்றம், எருமை, மரை |
| 2 | பிணா | மக்கள் |
| 3 | மூடு | யாடு, ஆடு |
| 4 | நாகு | எருமை, பெற்றம், நந்து |
| 5 | கடமை | யாடு |

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| 6 | அளகு | கோழி, கூகை, மயில் |
| 7 | மந்தி | குரங்கு, முசு, ஊகம் |
| 8 | பாட்டி | பன்றி, நாய், நரி |
| 9 | பிணா | மக்கள் |
| 10 | பிடி | பெண் யானை |
| 11 | பெடை,பெட்டை,பேடை, | ஒட்டகம், குதிரை, கழுதை, மரை |

### *உயர்திணை மரபுகள்*

- ✓ அந்தணர் மரபுகள்
  முப்புரி நூல், கமண்டலம், முக்கோல் தண்டு, அமரும் பலகை
- ✓ அரசர் மரபுகள்
  படை, கொடி, குடை,முரசு, குதிரை, களிறு, தேர், மாலை, முடி
- ✓ வணிகர்
  தானியங்களை விற்கவும், வாங்கவும் உரிமை உடையவர்
- ✓ வேளாளர்
  வேளாண் மக்களுக்கு உழுது உணவை பிறருக்கு அளிப்பதாகும்

### *ஓரறிவு உயிர்களின் வேறுபாடு*

தொடுதல் என்னும் உணர்வுடைய ஓரறிவுடைய புல், மரம்

*புல்லின் உறுப்புகள்*

தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை

*மரத்தின் உறுப்புகள்*

இலை, முறி, தளிர், தோடு, கிளை, குழை, பூ, அரும்பு, நனை

*உலகத்தோற்றம்*

நிலம் தீ வளி ஆகாயம் நீர் இவற்றால் உண்டாக்கப்பட்டது.

### *நூல்கள்:*

1. முதல்நூல் - நன்மை, தீமை என்னும் இருவினைகளுக்கு ஆட்படாமல் அறிவு முதிர்ந்த முனைவனால் ஆக்கப்படுவது முதல் நூலாகும்.
2. வழி நூல் - முதல் நூலை பின்பற்றி ஆக்கப்படுவது வழி நூலாகும்.

### *நூலின் பத்துவகைக் குற்றங்கள்*

1. கூறியது கூறல் - முன்னமே கூறிய செய்தியை மீண்டும் மீண்டும் கூறுதல்
2. மாறுகொள கூறல் - முன்னுக்குப் பின் முரண்பாடுடன்மாறுபடக் கூறுதல்
3. குன்றக் கூறல் - சொல்ல வேண்டியதைக் குறைவாகக் கூறுதல்
4. மிகைப்படக் கூறுதல் - அதிகமாக விளக்கிக் கூறுதல்
5. பொருள் இல மொழிதல் - பொருளற்றவற்றைத் தேவை இல்லாமல் கூறுதல்
6. மயங்கக் கூறுல் - அதுவா இதுவா எனப் பொருள் மயங்கக் கூறல்
7. கேட்போருக்கு இனிமை பயக்காத வகையில் கூறுதல்.
8. பழிமொழியால் இழுக்கு வறுமாறு கூறுதல்
9. தொன்மையை விட்டு விலகித் தானே ஒன்றைக் கூறுதல்
10. படிப்போருக்கு விளங்காத வகையில் கூறுதல்

Scanned with CamScanner

## நூலின் உத்திகள்

1. சொல்லக் கூடிய கருத்தை தெளிவாகக் கூறுதல்.
2. தெளிவாக பகுத்துக் கூறுதல்
3. பிறர் தெளிவாக அறிந்துக் கொள்ளுதல்
4. எளிதாக விளங்க வைத்தல்
5. எப்பொருளையும் விடுபடாமல் கூறுதல்
6. சிறுகருத்தையும் சேர்த்துக் கூறுதல்
7. தொடர்புடையக் கருத்தையும் விடுபடாமல் கூறுதல்
9. தெளிவான பொருண்மையைக் கூறுதல்
10. புதிதாகக் கண்ட கோட்பாட்டைத் தெளிவாகக் கூறுதல்
11. சான்றுகளைத் தெளிவாகக் கூறல்
12. உடன்பட்ட கருத்தை தெளிவாகக் கூறல்
13. கருத்தை தேவைப்படும் இடத்தில் கூறுதல்
14. அரண் சேர்க்கும் வகையில் கருத்தைக் கூறுதல்.
15. முன்னர் கூறிய கருத்திற்கு பின்னர் விளக்கம் தருதல்
16. மீண்டும் கருத்து வருமாயின் மேலே விளக்கப்பட்டுள்ளது எனக் கூறுதல்.
17. ஐயம் ஏற்பட்டால் பொதுப்படக் கூறுதல்
18. ஐயம் ஏற்படும் இடத்தில் நூலில் கூறியதை எடுத்துக் கூறுதல்.
19. சான்றுகளை ஆணையிடுவது போன்று கூறுதல்.
20. தெளிவாகப் புரிந்ததை வகுத்துக் கூறுதல்
21. வகுத்துக்கூறி விளக்குதல்
22. முடிவில் கருத்தை விளக்கிக் கூறுதல்.
23. பிறர் கூறியுள்ள கருத்தை சான்றாகக் கூறுதல்.
24. தான் கூறியக் கருத்தை சரியாக ஏற்றுக்கொள்ளுதல்.
25. இனமான கருத்தைக் கூறும் போது இடைவிட்டுக் கூறுதல்.
26. அறியாத ஒன்றை ஏற்றுக் கொள்ளுதல்
27. எதிர்காலத்திற்குப் பொருந்தி வருமாறுக் கூறுதல்.
28. எச்சப் பொருளை உணர்ந்துக் கொள்ளுதல்.
29. தேவைப்படும் இடத்தில் கருத்தைப் பொருத்திக் கூறுதல்.
30. ஆங்காங்கே தேவைப்படும் இடத்தில் பொருத்தி விளக்கிக் கூறுதல்
31. தெளிவில்லாதக் கருத்தை உய்த்துக் கூறுதல்.
32. தெளிவுப்படுத்திக் கூறுதல்.

## படிக்க வேண்டிய வினாக்கள்

1. தலைவியின் உடன்போக்குக் குறித்து எழுதுக.(39,40)
2. உவமை பற்றிய செய்திகளை விளக்கி எழுதுக.(49-52)
3. வாகைத்திணை பற்றிய செய்திகளை எழுதுக (73-75)
4. பாடாண்திணை தொடர்பான கருத்துக்களை விளக்கி எழுதுக(78-88)
5. தலைமக்களின் பண்புகள் குறித்து எழுதுக. (95,96)
6. களவொழுக்கத்தில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் கூற்றுகள்
7. வாயிலோர்(குறித்து எழுதுக.(163, 165-169)
8. பிரிவு குறித்த செய்திகளை எழுதுக.(182-189)
9. வரைவு கடாதல் குறித்து எழுதுக(207-209)
10. உள்ளத்து உணர்வுகள் (அ) காட்டலாகாப் பொருள்களைக் விவரி (243)
11. மெய்ப்பாட்டியல் முழுமையும் படிக்கவும்
12. வினை, பயன், வடிவம், நிறம் உவமைகளை விளக்குக.9283-287)
13. உவமம் உணர்த்தும் பொருள் குறித்து எழுதுக.(291)
14. மரபியல் குறித்து கட்டுரை வரைக.

Scanned with CamScanner